திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, இந்த டாகுமெண்டரி பிலிம்கள் எத்தனை தயாரிக்கிறார்கள், ஒரு ரிலீசிலே எத்தனை தயாரிக்கிறார்கள்? நம்முடைய தமிழகம் பூராவிலும் ரிலீஸ் செய்ய நிறைய வேண்டுமென்று கோரிக்கை வருகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: எத்தனை தயாரிக்கிறார்கள் என்னும் விவரம் என்னிடத்தில் இல்லை. கோரிக்கைகள் வருகின்றன, அவைகள் முடிந்தவரையிலும் நிறைவேற்றப் படுகின்றன.

* 348 வின.—திரு. கே. எ. வகாப்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

தமிழ்நாடு அரசு செய்திப் பிரிவினால் எடுக்கப்படும் செய்திப் படம், தமிழ்நாட்டிலுள்ள எல்லாத் தியேட்டர்களிலும் காட்டப் படுகிறதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஆம்.

திரு. கே. எ. வகாப்: தலைவரவர்களே, இந்தச் செய்திப் படங்கள் நகரங்களில்தான் எடுத்த ஒரு வாரத்திற்குள் காட்டப்படுகின்றன. ஆனால் கிராமங்களுக்கு வருவதற்கு 6 அல்லது 7 மாத காலம் ஆகின்றது. எனவே கிராமப்புற மக்கள் செய்திகளை உடனடியாகத் தெரிந்துகொள்ள குறுகிய காலத்தில் ஏறத்தாழ ஒரு மாத காலத்திற்குள் எல்லாக் கிராமங்களிலும் காட்ட ஏற்பாடுகளை அரசு செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஏறத்தாழ இரண்டாயிரம் தியேட்டர்கள் தமிழ்நாட்டில் இருப்பதாக நான் அறிகிறேன். நாம் எடுக்கும் இந்தப் படங்களின் பிரதிகள் 50 அல்லது 55 பிரதிகள்தான். இது மட்டுமல்ல, பொதுவாகவே திரைப்படங்கள்-முழு நீளத் திரைப்படங்கள் எடுப்பவர்கள் கூட 40 அல்லது 50 பிரதிகள்தான் எடுக்கிறார்கள். அவர்களும் அந்தப் படங்களைத் தமிழகம் முழுவதும் எல்லாயிடங்களிலும் திரையிட 6 மாத காலம் ஆகிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னது போல் சென்னையிலே மட்டுமல்லாமல், சென்னையிலே பத்து இடங்களிலே காட்டப்படுகின்ற அதேநேரத்தில் தமிழ்நாட்டிலே பல்வேறு கிராமங்களிலும் அப்படிப்பட்ட படங்கள் காட்டப்படுகின்றன. எனவே ஒரு வட்டம் வருவதற்கு, 1,360 தியேட்டர்களில் இந்த 55 பிரதிகளைக் கொண்டு காட்டுவதற்கு 6 மாத காலமாகிறது. அதைத் தவிர்க்க வேண்டுமென்றால் நாமும் 1,000 பிரதிகள் எடுக்க வேண்டும். அதற்காகும் செலவு மிக அதிகமாகும்.

1971 டிசம்பர் 14]

திரு. கே. என். குமாரசாமி: தலைவரவர்களே, அரசியல் இயக்கங்கள், இன்னும் மாநாடுகள், தொழிற்சங்க மாநாடுகள் போன்றவைகள் இந்தச் செய்திப்படங்களில் அரசு எடுப்பதற்கு அனுமதிக்குமா? அப்படிப்பட்ட செய்திப்படங்களை வெளியிடுவது நாட்டிற்கு நல்லதுதானே என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: குறிப்பிட்ட அரசியல் கட்சிகளின் எந்த மாநாடும் எடுக்கப்படுவதில்லை. ஆனால் அரசியல் தலைவர்கள் எவரிடத்திலும் எந்தவிதமான கட்சி மாறுபாடும் இல்லாத அளவிற்கு அவர்களுக்கு நடைபெறும் விழாக்கள், அவர்கள் பொதுவாகக் கலந்து கொள்ளும் பொது நிகழ்ச்சிகளை, எந்தப் பாகுபாடும் காட்டாமல் எல்லா அரசியல் தலைவர்களையும் ஒரேவகையிலே இந்த அரசு கருதி செய்திப்படங்கள் வெளியிடப் படுகின்றன.

திரு. இ. எல். தியாகராசன்: தலைவரவர்களே, இந்தப் படங்களை விநியோகிக்க தனிப்பிரிவு ஏதேனும் அமைக்கப் படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இப்பொழுது இந்தப் பிரதிகளையெல்லாம் மத்திய அரசின் பிலிம் டிவிஷன் மூலம் நாம் விநியோகிக்கிறோம். அதிலே சில இடையூறுகள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறிய யோசனையின் அடிப்படையில் ஏற்கனவேயிருக்கும் அந்தக் குறைபாடுகளை நீக்க தமிழ்நாடு திரைப்பட பிரிவு தயாரிக்கும் செய்திப்படங்களைத் தமிழ்நாடு அரசே விநியோகிக்கலாமா என்ற யோசனை இப்பொழுது பரிசிலனையில் இருக்கிறது.

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, நம்முடைய தமிழ் நாட்டில் இப்படிப்பட்ட படங்களுக்கு மக்களிடத்திலே நல்ல வரவேற்பு இருக்கிறது. இதை இன்னும் விரிவுபடுத்தி, கிராமங்களில் நடைபெறும் கிராமிய நடனங்கள், ஸ்போர்ட்ஸ் போன்ற இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளையும் அதிலே சேர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இப்பொழுதே அதிலே ஸ்போர்ட்ஸ் போன்றவைகள் சேர்க்கப்படுகின்றன, கிராமிய நடனம் இவைகளெல்லாம் இணைக்கப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் எல்லாப் படங்களையும் பார்க்கவில்லை என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா 349.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இவ்வினாக்கள் எல்லாவற்றையும் ஒன்றாக எடுத்துக் கொண்டிருக்கலாம்போல் இருக்கிறதே.